# இலங்கையின் இடை நிலைக் கலைத்திட்டத்தின் குடியியற் கல்விப் பாடத்தில் ஜனநாயக எண்ணக்கருவின் உள்ளீர்ப்புக் குறித்த உள்ளடக்கப் பகுப்பாய்வு

# Content analysis on the concept of democracy in the civic education lesson of the intermediate curriculum in Srilankan Government School

எம். என். இக்ராம்

ஆசிரியர், மதீனா தேசிய பாடசாலை, சியம்பலாகஸ்கொடுவை,
ikrammn@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

குடியியற் கல்விப் பாடத்தின் பிரதானமான நோக்கம் ஜனநாயக சமூகமொன்றில் வாழும் ஒரு குடிமகனை உருவாக்குவதாகும். அந்த வகையில் இந்த ஆய்வு இடை நிலைக் கலைத்திட்டத்தில் 2007ஆம் ஆண்டு முதல் உள்வாங்கப்பட்டுள்ள குடியியற் கல்விப் பாடத்தில் ஜனநாயக எண்ணக்கருவின் உள்ளீர்ப்புக் குறித்து ஆய்வு செய்கின்றது. அதற்காக, இந்த ஆய்வு ஜனநாயகத்தின் பிரதான பண்புக் கூறுகளை வரையறை செய்து, அவை தேசியக் கல்விக் கொள்கையில், தரம் 06-11 வரையான குடியியற் கல்விப் பாடக் குறிக்கோள்கள் மற்றும் பாட உள்ளடக்கத்தில் உள்வாங்கப்பட்டுள்ளதா என்பது குறித்து உள்ளடக்கப் பகுப்பாய்வை மேற்கொள்கின்றது. இந்த ஆய்வு பண்புசார் அணுகுமுறையில் ஓர் உள்ளடக்கப் பகுப்பாய்வாக அமையப் பெற்றுள்ளது. இதற்காக நிகழ்தகவற்ற மாதிரியமைப்பில் தரம் 6-11 வரையான குடியியற் கல்வி பாடப் புத்தகங்களின் பிரதான, கிளைத் தலைப்புக்கள் மற்றும் பிரதான அட்டவணைகள் என்பன நோக்கமாதிரிகளாக ஆய்வுக்குட்படுத்தப்பட்டன. இதனை உறுதிப்படுத்தும் வகையில் தேசியக் கல்விக் குறிக்கோள்கள் மற்றும் தரம் 6-11 வரையான குடியியற் கல்வி பாடத்தின் குறிக்கோள்கள் என்பனவும் ஆய்வுக்கெடுத்துக் கொள்ளப்பட்டன. இதற்காக பண்புச் சுட்டி அட்டவணைகள் இரண்டும் பகுப்பாய்வு அட்டவணைகள் மூன்றும் தயாரிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டன. கண்டடைவுகள் நுஒஉநட ளூாநநவ ஐ பயன்படுத்தி விவரண புள்ளியியல் நுட்பத்தினடிப்படையில் பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டது. இதனடியாக குடியியற் கல்விப் பாடம் அதன் உள்ளடக்கத்தில் 70மூ ஜனநாயக எண்ணக்கருவை கொண்டமைந்துள்ளதாகக் காண்பிக்கிறது. பாடசாலை சமூகத்திலும் பொதுச் சமூகத்திலும் ஜனநாயகப் பண்பை வளர்ப்பதில் கலைத்திட்டமல்லாத ஏனைய கற்றல் கற்பித்தல் காரணிகளான ஆசிரியர் நியமனம், பயிற்சி, கற்பித்தல் முறை, பாடத்திற்கான முக்கியத்துவம் என்பன செல்வாக்குச் செலுத்தியிருக்கலாம் என்பதனை ஆய்வு அடையாளப்படுத்துவதுடன் குடியியற் கல்விப் பாடத்தை தரம் 10, 11களில் பிரதான பாடமாக மாற்ற வேண்டும் என்ற பரிந்துரையையும் பிரதானமாக முன்வைக்கின்றது.

**திறவுச் சொற்கள்:** குடியியற் கல்வி, இடைநிலைக் கலைத்திட்டம், ஜனநாயகம், கல்வி, அரசு, சமூகம்

## அறிமுகம்

நாகரிகமடைந்த ஒரு சமூகத்தின் முதன்மைப் பண்பு ஜனநாயகமாகும். ஜனநாயகப் பண்பைப் பெற்ற சமூகம் வன்முறை நாட்டமின்றி தமது விவகாரங்களை தமக்கிடையே சுதந்திரமாக விவாதித்து தீர்மானித்துக் கொள்ளும் மனப்பாங்கையும் முறைமைகளையும் கொண்டிருக்கும். "ஜனநாயகம் என்பது ஒரு அரசை அமைப்பது மாத்திரமல்ல, அது அதனையும் தாண்டிய விவகாரம். அது அடிப்படையில் இணைந்த, தொடர்புபட்ட அனுபவத்தைக் கொண்ட, கூட்டு வாழ்வு நிலையாகும்" (Dewey, 1916) என ஜனநாயகமும் கல்வியும் என்ற தனது நூலிலே ஜோன் டுவீ குறிப்பிடுவது போன்று ஜனநாயகம் என்பது ஒரு வாழ்க்கை முறையாகும். அந்த வாழ்க்கை முறை தோற்றம் பெறுவதற்கு கல்வி இன்றியமையாத காரணியாகும்.

ஜனநாயக சமூகமொன்றின் தோற்றம் கல்வியிலேயே தங்கியுள்ளது. ஆனால், கல்வித்துறையே இன்று அந்தப் பண்புகளை இழந்து காணப்படுகிறது. வகுப்பறை முதல் அதிபர் அறை வரை ஆசிரியர்களிடமும் அதிபர்களிடமும் அதிகாரம் குவிக்கப்பட்டு மாணவர்கள் அடிமைகள் போன்று நடத்தப்படுகிறார்கள். இதற்கு பிரதான காரணம் கல்வி நிர்வாகக் கட்டமைப்பும் கலைத்திட்டமுமாகும். இதில் இவற்றை திட்டமிடுகின்ற அரசுக்கு பெரும் பங்களிப்புள்ளது. இதன் விளைவு இன்றைய தாழ்வுகள், கேவலங்கள், கொடுமைகள், ஊழல்கள், அநீதிகள், வன்முறைகள் என்பவற்றின் ஊற்றாக கல்வி மாறிப்போயுள்ளது. (வே.வசந்திதேவி, 2018) இதற்கான மாற்று எங்கிருந்து தோன்ற முடியும்? அது கல்வியிலிருந்துதான் பிறக்க முடியும் என்று இந்தியப் பேராசிரியர் வசந்தி தேவி தனது கல்வி ஓர் அரசியல் என்ற நூலிலே சுட்டிக் காட்டுகிறார். இந்தப் பின்னணியில் தமிழ் நாட்டில் மனித உரிமைக் கல்வியை கலைத்திட்டத்தில் கொண்டுவருவதில் முதன்மைப் பங்கை பேராசிரியர் வசந்தி தேவி வகித்தார்.

அந்த வகையில் எமது நாட்டின் தற்போதைய ஜனநாயக மறுப்புச் சூழலினை மாற்றுவதில் கல்விக்கு பெரும் பங்குள்ளது. இதில் கல்விக்கு பங்குள்ளது என்பது கல்வியின் உள்ளடக்கத்தை, போதனை முறைகளை தீர்மானிக்கும் கலைத்திட்டத்துக்கு பெரும் பங்குள்ளது என்பதாகும். இந்தப் பின்னணியில் 2003ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட இலங்கையின் தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தேசிய கல்வி இலக்குகளுக்கு அமைவாக இலங்கையின் கலைத்திட்டத்திலே குடியுரிமைக் கல்வி என்ற ஒரு பாடம் 2007ஆம் வருடம் புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட கலைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டது.

குடியுரிமைக் கல்விப் பாடத்தின் பிரதான இலக்கு ஜனநாயக சமூகமொன்றில் வாழ்வதற்கான ஒரு சிறந்த பிரஜையை உருவாக்குவதாகும். (Heller, 2012) இந்தப் பாடம் கலைத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டு பத்து வருடங்களை கடந்திருக்கின்ற இன்றைய சூழலில் அதன் விளைவுகளை பாடசாலை சமூகத்திலோ, பொது சமூகத்திலோ காணமுடியவில்லை. எனவே, இந்தப் பாடத்தில் ஜனநாயக எண்ணக்கரு போதியளவில் உள்வாங்கப்பட்டுள்ளனவா என்பது கண்டறியப்படுவது இந்த நிலைக்கு தீர்வு காண்பதற்கான ஆரம்ப எட்டாகும். எனவேதான் இது குறித்த உள்ளடக்கப் பகுப்பாய்வொன்று மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

**ஆய்வு பிரச்சினை**

வன்முறைக் கலாச்சாரம் மேலோங்கி, ஜனநாயக விழுமியங்கள் புறக்கணிக்கப்பட்ட ஒரு சூழல் பாடசாலை முதல் பாராளுமன்றம் வரை நிழவுகிறது. இந்நிலையை கல்வியால் மாத்திரமே மாற்ற முடியும். ஒரு சமூகத்தின் பண்பு மாற்றத்தில் கல்வியே பிரதான இடத்தை வகிக்கின்றது. அதிலும் இடைநிலைக் கல்விக்கு இதில் பிரதான பங்கு காணப்படுகிறது.

அந்த வகையில் வன்முறைக் கலாச்சாரத்தை மாற்றியமைக்கத்தக்க, ஜனநாயக எண்ணக்கருவை பாடசாலை இடைநிலைக் கலைத்திட்டத்தில் உள்வாங்குவதற்காக 2007ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட கலைத்திட்டத்தில் குடியுரிமைக்கல்வி என்ற பாடம் சேர்க்கப்பட்டது. எனினும் இந்தப் பாடம் அறிமுகம் செய்யப்பட்டு 10 வருடங்கள் கடந்த நிலையிலும் போதிய மாற்றங்களை காணமுடியாதுள்ளது.

எனவே, இந்தப் பாடம் ஜனநாயக எண்ணக்கருவை போதியளவில் உள்ளடக்கியுள்ளதா என்பதை கண்டறிந்து உறுதிப்படுத்த வேண்டிய அவசியம் காணப்படுகிறது. இது சமூகத்தில் வன்முறைக் கலாச்சாரத்தை இல்லாமல் செய்து; ஜனநாயக பண்புகளை வளர்ப்பதனை உறுதிப்படுத்துவதன் முதற்படியாகும்.

**ஆய்வு நோக்கம்**

1) தரம் 06 முதல் 11 வரையான இடை நிலைக் கலைத்திட்ட குடியியற் கல்விப் பாடத்தில் ஜனநாயக எண்ணக்கரு எந்தளவு உள்வாங்கப்பட்டுள்ளது என்பதனை பகுப்பாய்வு செய்வதே இந்த ஆய்வின் பிரதான குறிக்கோளாகும். இந்தக் குறிக்கோளை அடைவதற்காக,
2) ஜனநாயகத்தின் பிரதான பண்புக் கூறுகள் யாவை என்று வரையறை செய்தல்.
3) ஜனநாயகப் பண்புக் கூறுகள் தேசியக் கல்விக் கொள்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதை கண்டறிதல்.
4) ஜனநாயக பண்புக் கூறுகள் தரம் 06 முதல் 11 வரையான குடியியற் கல்வி பாடக் குறிக்கோள்களுள் உள்வாங்கப்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிதல் என்பன துணைக் குறிக்கோள்களாக அமையப் பெற்றுள்ளன.

**இலக்கிய மீளாய்வு**

பாடசாலை என்பது சிறந்த ஜனநாயக சமூகமொன்றில் வாழ்வதற்கான பிரஜைகளை உருவாக்கும் கலைத்திட்டத்தை கொண்டிருப்பது அவசியமாகும். அப்போதுதான் அங்கிருந்து வெளியாகின்றவர்கள் சமூகத்துக்கு பொருத்தம் பெற்றவர்களாக வெளிவருவார்கள். இது குறித்து ஹெலர் பின்வருமாறு விளக்குகிறார். ‘‘ஒரு சுதந்திரமான ஜனநாயக சமூகமொன்றில் பாடசாலைகளின் பணியென்ன? இந்த வினாவுக்கு பதிலளிப்பது மிகவும் சிக்கல் நிறைந்ததாகக் காணப்படுகிறது. இதற்கு பதிலளிப்பதற்கு முனையும் போது கலைத்திட்டம் குறித்த அடிப்படை வினாக்கள் மேல் எழுகின்றன. இந்த வினாக்களுக்கு பதிலளிப்பது சிக்கலானதாயினும் அதற்குரிய சரியான பதிலைத் தேடாமையினாலேயே பாடசாலைக் கலைத்திட்டங்கள் குறுகிய அரசியல், பொருளாதார நிகழ்ச்சி நிரல்களை நிறைவு செய்யும் வகையில் வடிவமைக்கப்படுகின்றன. இதனால் பாடசாலைகள் தவறான பாதையில் இட்டுச் செல்லப்படுகின்றன. இறுதியில் இத்தகைய பாடசாலைகளிலிருந்து

ஜனநாயக சமூகமொன்றில் வாழ்வதற்கு குறைந்தபட்ச தகுதியையேனும் கொண்டிராத, உலகப் பொருளாதார போட்டிக்கு முகம் கொடுக்க சக்தியற்ற தனிநபர்கள் வெளியே வருகின்றார்கள்." (Heller, 2012)

பேராசிரியர் ரோபர்ட் ஜே. ஸ்டோன்பேர்கர் கல்வி குறித்து குறிப்பிடும் போது "பாடசாலைகள் வழக்கமான எண், எழுத்து, வாசிப்பு என்ற மூன்று விடயங்களையும் வலியுறுத்துகின்றன. ஆனால், சிறந்த கல்வியென்பது அவை மாத்திரமல்ல. பிள்ளைகள் கலை, இசை, சமூக விஞ்ஞானங்கள், உடற்கல்வி போன்றவற்றை கற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பம் பெறாமல் இருக்கின்றார்கள். அதி மீத்திறன் உள்ள மாணவர்களுக்கு அவர்களுக்கு ஏற்ற கல்வி கிடைப்பதில்லை. ஆனால், கல்வியென்பது இன்றைய சிக்கல் நிறைந்த சமூகத்தில் சிக்கல் நிறைந்த தீர்மானங்களை எடுக்கும் இயலுமையும் திறமையும் கொண்ட, அறிவு பொதிந்தவர்களாக மாற்றும் செயற்பாடாகும்." (Sternberg 2004, p56) (Heller, 2012) எனக் குறிப்பிடுகிறார். இந்த வகையில் தான் வாழும் சமூக அமைப்பில் சிறந்த பிரஜையாக வாழ்வதற்கான வழிகாட்டல்களை பொதிந்ததாக கல்வியமைப்பும் அதன் அடிப்படையான கலைத்திட்டமும் காணப்பட வேண்டும் என்பது புலனாகிறது.

இது குறித்து ஹெலர் மேற்கோள்காட்டும் ஒரு நூல் பின்வருமாறு குறிப்பிடுகிறது. "நாம் ஒரு தேசம் என்றவகையில் எமது பிள்ளைகளை வெறுமனே பரீட்சையில் சித்தியடைந்து பாடசாலைக் கல்வியை முடித்துச் செல்பவர்களாக அல்லாமல் செயற்திறன் கொண்ட, மகிழ்ச்சியாக வாழக் கூடிய எதற்கும் இசைந்து கொடுத்து வாழும் பிரஜையாக வளர்த்தெடுக்க வேண்டிய தேவை காணப்படுகிறது." (Paige and Huckabee 2005, p52) (Heller, 2012)

எமது சந்ததியினர் செயற்திறன் கொண்டவர்களாக உருவாக வேண்டுமாயின் அவர்களை ஒரு ஜனநாயக சமூகத்தில் வாழும் தகுதி கொண்டவர்களாக உருவாக்க வேண்டும். ஜனநாயக சமூகத்தில் வாழும் தகுதி கொண்டவர் என்பது தனது பிரஜா உரிமையை, குடிமை நிலையை சரியாக விளங்கி செயற்படுகின்ற நிலையாகும். அவர் தன்னை மாத்திரம் நோக்குபவராக அல்லாமல் தான் ஒரு சமூகத்தின், தேசத்தின் பிரஜை என்ற நிலையில் வாழ்வார். இதனையே ரோஸ் "உண்மையான ஜனநாயகம் என்பது, ஒரு பொதுமகன் சுதந்திரமாக சிந்திக்கவும், சிந்தித்து முடிவெடுக்கவும் ஏற்புடைய இயலுமையை வழங்குவதாகும்" (Rose, 2014) என குறிப்பிடுகிறார்.

ஒரு சிறந்த கலைத்திட்டத்தின் கட்டமைப்பு எப்படியிருக்கும்? சிறந்த கல்விக்கான பலமான அத்திவாரமாக அமையும் எண்ணக்கருக்களும் திறன்களும் எவை? அவை தான் வாழ்க்கைக்கான கல்வி விருத்தியின் அடிப்படைகளாக அமையத்தக்க கருணை, சுபாவம், சிந்திக்கும் திறன், பிரச்சினை தீர்க்கும் ஆற்றல், தொடர்பாடல் திறன் என்பனவாகும். இவை கல்வியின் பலமான அத்திவாரமாக அமையும் தூண்களாகும். என (Heller, 2012) ஒரு கலைத்திட்டத்தில் அடங்கியிருக்க வேண்டிய முக்கிய கூறுகளாக ஜனநாயகப் பண்புகளை குறிப்பிடுகிறார்.

ஜனநாயக குடியுரிமைக் கல்வி என்பது முற்றிலும் வித்தியாசமான அறிவிலும் திறன்களிலும் கவனம் குவிக்கின்றது. பொருளாதார ரீதியாக தன்நிறைவு பெற்று வாழவிரும்புகின்ற ஒவ்வொரு பிரஜையும் கற்றுக் கொள்ள வேண்டிய அடிப்படைக் கல்வி எவ்வாறு அமைய வேண்டும் என Thomas Jefferson (1856 [1818]) விவாதிக்கையில் "கல்வி தனது அயலவருக்கும் நாட்டிற்கும் தான் செய்ய வேண்டிய கடமைகளை விளங்கிக் கொள்ளத்தக்கதாக அமையவேண்டும். சட்டத்தையும் ஒழுங்கையும் கடைப்பிடிக்கும் வகையில் தனது உரிமைகளை அறிந்து கொள்வதாக அமைய வேண்டும். தனது பிரதிநிதிகளை தனது விருப்புப்படி தெரிவு செய்து கொள்ளும் தனது உரிமையை தெரிந்து கொள்வதாக அமைய வேண்டும். நீதிக்காகவும் நியாயத்திற்காகவும் தொடர்ச்சியாய் செயற்படும் விருப்பைக் கொடுக்க வேண்டும்." Thomas Jefferson (1856 p. 434) (Levinson, Meira, 2014)

குடியுரிமைக் கல்வியின் பிரதான அம்சமாக ஜனநாயகம் குறித்த விடயமே அமைந்து காணப்படும் இதனை Citizenship and Civic Education என்ற ஆய்வு நூலிலே பின்வருமாறு ஆய்வாலர்கள் விவாதிக்கின்றனர். "குடியுரிமைக் கல்வியின் நோக்கம் அது கொடுக்கப்படும் சமூகத்துக்குச் சமூகம் வேறுபாடு அடைய முடியும் எனினும் உலகிலுள்ள அனைத்து நாடுகளும் போல ஏதோ ஒரு வகையில் ஜனநாயக ரீதியானவை. எனவே, குடியுரிமைக் கல்வியை வலியுறுத்தும் அனைத்து கல்வித் தத்துவங்களும் போல் ஜனநாயக சூழமைவை கருத்திற் கொண்டதாகவே அமைந்து காணப்படுகிறது." (Levinson,

Meira, 2014) அதனை மேலும் விவாதிக்கையில் "குடியுரிமைக் கல்வி என்பது ஜனநாயக குடியாளனாக வாழவ்தற்கான தனியான சில அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றை வழங்குதல் என்பதைப் பார்க்கிலும் குடிமைச் சமூகத்தின் உறுப்பினர் ஒருவரை வலுப்படுத்துகின்ற சிறந்த விழுமியக் கல்வியை கொடுப்பதாகும் (Levinson, Meira, 2014) என்று குடியுரிமைக் கல்வியென்பதும் அதன் பிரதான அம்சமான ஜனநாயகம் என்பதும் விரிந்த கருத்தைக் கொடுப்பதாக விளக்குகின்றனர்.

குடியுரிமைக் கல்வியின் பிரதான அம்சமான ஜனநாயகம் குறித்து முக்கியமான கல்வியலாளர்களுள் ஒருவரான ஜோன் டுயி "ஜனநாயகம் என்பது ஒரு அரசை அமைப்பது மாத்திரமல்ல அது அதனைத்தாண்டிய விவகாரம். அது அடிப்படையில் இணைந்த, தொடர்புபட்ட அனுபவத்தைக் கொண்ட, கூட்டு வாழ்வு நிலையாகும்" (Dewey, 1916) எனக் குறிப்பிடுகிறார். இங்கு ஜனநாயகம் என்பது வெறுமனே ஒரு அரசுடன் மாத்திரம் தொடர்பான எண்ணக்கரு என்பதனைத் தாண்டி அது ஒரு வாழ்க்கை முறை என்று விளக்கப்படுவதை அவதானிக்கிறோம்.

ஜனநாயக அரசுக்கான நடைமுறை வரைவிலக்கணம் ஒன்று குறிப்பிடுவதாயின் "ஜனநாயக அரசு என்பது வளர்ந்த குடிமக்களால் நேரடியாகவோ, சுதந்திரமாக தெரிவு செய்யப்பட்ட தமது பிரதிநிதிகளை வைத்தோ அதிகாரத்தோடும் சிவில் சமூகத்தின் பொறுப்புக்களோடும் நடாத்தப்படும் அரசாகும்." (Klein, 2011)

'Concepts and Principles of Democratic Governance and Accountability A Guide for Peer Educators' என்ற கலைத்திட்ட வழிகாட்டல் நூலிலே கெலின் என்பவர் ஜனநாயகம் என்பதனை ஆட்சியமைப்புடன் தொடர்புபட்ட வகையில் விளக்குகிறார். "ஜனநாயகம் என்பது ஒரு அரச இயந்திரத்தை நிறுவுதல் என்பதைப் பார்க்கிலும் பரந்துபட்டதாகும். அது நன்கு அறியப்பட்ட சிறந்த விழுமியங்கள், மனப்பாங்குகள், நடைமுறைகள் என்பவற்றின் தொகுப்பாகும். இது உலகெங்கிலுமுள்ள பல்வேறு கலாச்சாரங்கள் மற்றும் சமூகங்களிடையே வித்தியாசமான பாங்கினை கொண்டமைந்திருக்கும்" (Klein, 2011)

ஜனநாயக ஆட்சியின் கூறுகளை What is Democracy? என்ற தலைப்பில் Hilla University for Humanistic Studies இல் இடம்பெற்ற ஒரு ஆய்வுரை பின்வருமாறு பட்டியல்படுத்துகிறது. ஜனநாயகம் என்பது நான்கு அடிப்படை அம்சங்களைக் கொண்டமைந்த ஒரு ஆட்சி முறைமை எனக் குறிப்பிடலாம். அவை:

1) சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல் ஒன்றினூடாக ஒரு அரசை தெரிவு செய்வதற்கு அல்லது மாற்றுவதற்குரிய ஒரு அரசியல் முறைமை காணப்படும்.
2) சிவில் வாழ்விலும் அரசியல் செயற்பாட்டிலும் குடிமக்கள் செயற்திறனுடன் பங்கு கொள்ளும் நிலை காணப்படுதல்.
3) அனைத்துக் குடிமக்களதும் அடிப்படை மனித உரிமைகள் பேணப்படும் சூழல் காணப்படுதல்.
4) அனைத்துக் குடிமக்களுக்கும் சமமாக அமுலாக்கப்படக் கூடிய சட்ட ஆட்சி காணப்படுதல். (Studies, 2004)

2004ஆம் வருடம் இடம் பெற்ற ஐ.நா. பொது சபையின் கூட்டத் தொடரில் அடிப்படை ஜனநாயகப் பண்புகளாக பின்வருவனவற்றை பிரகடனப்படுத்தியது. அவை:

1) அதிகாரப் பிரிப்பும் சமநிலையும்
2) நீதித்துறையின் சுதந்திரம்
3) பன்மைத்துவமான அரசியல் கட்சி மற்றும் நிறுவன முறைமை
4) சட்ட ஆட்சிக்கு மதிப்பளித்தல்
5) வகை கூறலும் வெளிப்படைத்தன்மையும்
6) சுதந்திரமானதும் நம்பகமானதுமான பன்மைத்துவமான ஊடகம்
7) மனித மற்றும் அரசியல் உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் நிலை (உ+ம்: ஒன்று கூடுவதற்கும் கருத்தச் சொல்வதற்குமான உரிமை, வாக்களிப்பதற்கான உரிமை, வாக்கு கேட்பதற்கான உரிமை) (Meyer, 2011).

கலைத்திடம் எவ்வாறு அமைய வேண்டும்? அதில் குடியுரிமைக் கல்வியின் அவசியம், குடியுரிமைக் கல்வியின் பிரதான அம்சமாக ஜனநாயகம் எப்படி காணப்படுகிறது என்பவற்றை விளங்கிக் கொண்ட பின்னணியில் இலங்கையின் இடைநிலைக் கலைத்திட்டத்தில் குடியியற் கல்வி எந்த நோக்கத்தின் அடிப்படையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது என்பதனை விளங்கிக் கொள்வதற்காக குடியியற் கல்விக்கான ஆசிரியர் கை நூலை ஆராய்கின்ற போது அது பின்வருமாறு குறிப்பிடுகிறது. "குடியியற்

கல்வி எனும் பாடத்தைப் பாடசாலை முறைமையில் அறிமுகஞ் செய்வதன் முக்கிய நோக்கம் இலங்கையில் நிலைபேறான சமாதானத்தை நிலைநிறுத்துவதாகும். சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர், மலாயர் என்றவாறாக பல்வேறு இனங்களாகவோ பௌத்தர்கள், இந்துக்கள், கத்தோலிக்கர், கிறிஸ்த்தவர், இஸ்லாமியர் என்றவாறாக பல்வேறு சமயப் பிரிவினராகவோ பிரிந்து இருப்பதை விட சகல இன, சகல சமயங்களைச் சேர்ந்த மக்களும் எவ்வித பேதங்களுமின்றி இலங்கை மாதாவின் பிள்ளைகளாக, ஒற்றுமையாக, சமத்துவமாக, அமைதியாக, சகவாழ்வு வாழ்வதே சமாதானத்தை மதிக்கும் ஒவ்வொருவரதும் எதிர்பார்ப்பாகும். நிலைபேறான சமாதானத்தை நிலை நிறுவத்துவதற்காக தமது குடும்பம் தொடக்கம் உலகளாவிய அகிலக் குடும்பம் வரையில் எனும் கருப்பொருளின் கீழ் பிரதான 12 பாடக் குறிக்கோள்கள் மற்றும் 20 பிரதான பாடத்தேர்ச்சிகளின் கீழ் குடியியற் கல்விப் பாடமானது 6ஆந் தரம் தொடக்கம் 11ஆந் தரம் வரையிலும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது." (சமூகவிஞ்ஞானத்துறை, 2018)

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வு கலைத்திட்டத்தில் ஜனநாயக எண்ணக்கருவின் உள்ளடக்கம் குறித்த பகுப்பாய்வாக அமைவதால் பண்புசார் ஆய்வு (Qualitative Research) வடிவம் பயன்படுத்தப்பட்டது. இங்கு ஜனநாயகம் குறித்த எண்ணக்கருவை மாணவர்களுக்கு வழங்குவதற்கு அடிப்படையாக அமைகின்ற கலைத்திட்டம் அதனை எந்தளவிற்கு உள்ளடக்கியுள்ளது என்பது தொடர்பாக, 2004ம் ஆண்டு ஐ.நா. பொதுச்சபை பிரகடனப்படுத்திய ஜனநாயக எண்ணக்கருவின் முக்கிய 7 கூறுகளை வைத்து 17 சுட்டிகளும் ஜனநாயகம் குறித்த ஆய்வு நூல்களிலிருந்து 11 சுட்டிகளுமாக மொத்தம் 28 சுட்டிகள் தயாரிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டது. இதற்காக நிகழ்தகவற்ற முறையில் மாதிரிகள் (Non Probability Sample) தெரிவு செய்யப்பட்டன. தரம் 06 முதல் 11 வரையான குடியியற் கல்வி பாடப் புத்தகங்களின் உள்ளடக்கத்தில் பிரதான, கிளைத்தலைப்புக்கள் மற்றும் பிரதான அட்டவணைகள் மாதிரிகளாகக் கொள்ளப்பட்டன. இவற்றை உறுதிப்படுத்தும் வகையில் 08 தேசியக் கல்விக் குறிக்கோள்களும் தரம் 06 முதல் 11 வரையான குடியியற் கல்வி பாடத்தின் 12 பாடக் குறிக்கோள்களும் ஆய்விற்கான மாதிரிகாளாக கொள்ளப்பட்டன.

இந்த ஆய்வுக்காக தரவுப் பகுப்பு அட்டவணைகள் ஐந்து தயாரிக்கப்பட்டன. தரம் 6 முதல் 11 வரையான குடியியற் கல்வி பாடப் புத்தகங்களை பகுப்பாய்வு செய்வதற்காக ஐ.நா சபையின் ஜனநாயகத்தின் அடிப்படைப்பண்புச் சுட்டியினை வைத்து ஒரு பகுப்பாய்வு அட்டவணை தயாரிக்கப்பட்டு ஆய்வுக்காக பயன்படுத்தப்பட்டது. உள்ளடக்கத்தை இன்னும் சற்று விரிவாக ஆராயும் வகையில் ஜனநாயக எண்ணக் கருவை பிரதிபலிக்கும் விரிவான பண்புகள் கொண்ட மற்றுமோர் பகுப்பாய்வு அட்டவணையும் தயாரிக்கப்பட்டு ஆய்வுக்கு பயன்படுத்தப்பட்டது. அத்தோடு தேசியக் கல்வி இலக்குகளில் ஜனநாயக எண்ணக்கருவின் உள்ளடக்கம் குறித்து பகுப்பாய்வு செய்வதற்காக ஒரு பகுப்பாய்வு அட்டவணை தயாரித்து பயன்படுத்தப்பட்டது. அடுத்து, தரம் 06 முதல் 11 வரையான குடியியற் கல்வி பாடக் குறிக்கோள்களுள் ஜனநாயக எண்ணக்கருவின் உள்ளடக்கம் குறித்து பகுப்பாய்வு செய்வதற்காக இன்னுமோர் பகுப்பாய்வு அட்டவணை தயாரித்து பயன்படுத்தப்பட்டது. அதனுடன் சேர்த்து பிரதான தலைப்புக்களினை மாத்திரம் அட்டவணைப்படுத்தி பயன்படுத்தப்பட்டது.

இந்த ஆய்வில் பகுப்பாய்விற்காக உள்ளடக்க ஆய்வு ஆரம்பமாக பயன்னபடுத்தப்பட்டது. இதன் போது தரம் 06 முதல் 11 வரையான குடியியற் கல்வி பாடப்புத்தகங்களின் பிரதான தலைப்புக்களும் உபதலைப்புக்களும் பிரதான அட்டவணைகளும் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டு பதியப்பட்டது. இதனை உறுதிப்படுத்தும் வகையில் தேசியக் கல்விக் குறிக்கோள்களும் தரம் 06 முதல் 11 வரையான குடியியற் கல்வி பாடக் குறிக்கோள்களும் அவதானிப்புக்கு உட்படுத்தப்பட்டு பதியப்பட்டது. அத்தோடு பாடப் புத்தகங்களின் பிரதான தலைப்புக்கள் தனியாக தொகுக்கப்பட்டு அவதானிப்புக்குட்படுத்தப்பட்டு பதியப்பட்டன. பின்னர் பதியப்பட்ட அட்டவணைகள் Excel Sheet னை பயன்படுத்தி பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டது. இதற்காக விவரணப் புள்ளியியல் நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டு விகித அடிப்படையில் முடிவுகள் பெறப்பட்டன.

**ஆய்வுக் கண்டுபிடிப்புக்களும் கலந்துரையாடலும்**

சர்வதேச அளவில் பொதுவாக அங்கீகாரம் பெற்ற ஜனநாயகத்தின் பண்புகளாக 2004ஆம் வருடம் இடம் பெற்ற ஐ.நா. பொது சபையின் கூட்டத் தொடரில் பின்வரும் 07 பண்புகள் அடையாளப்படுத்தப்பட்டன. அவை:

1) அதிகாரப் பிரிப்பும் சமநிலையும்
2) நீதித்துறையின் சுதந்திரம்
3) பன்மைத்துவமான அரசியல் கட்சி மற்றும் நிறுவன முறைமை
4) சட்ட ஆட்சிக்கு மதிப்பளித்தல்
5) வகை கூறலும் வெளிப்படைத்தன்மையும்
6) சுதந்திரமானதும் நம்பகமானதுமான பன்மைத்துவமான ஊடகம்
7) மனித மற்றும் அரசியல் உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் நிலை (உ+ம்: ஒன்று கூடுவதற்கும் கருத்தச் சொல்வதற்குமான உரிமை, வாக்களிப்பதற்கான உரிமை, வாக்கு கேட்பதற்கான உரிமை) (Meyer, 2011). என்பனவாகும்.


இந்த 07 பண்புகளையும் கண்டடையும் வகையில் 17 பண்புச் சுட்டிகள் கண்டடையப்பட்டன. அவை, சட்ட ஆட்சி, நீதித்துறைச் சுதந்திரம், அதிகார சமநிலை, அதிகார பரவலாக்கல், அதிகாரப் பிரிப்பு, பல் கட்சி முறை, பன்மைத்துவம், வெளிப்படைத்தன்மை, பொறுப்புக் கூறல், ஊடகச் சுதந்திரம், அடிப்படை உரிமைகள், சிவில் உரிமை, கருத்துச் சுதந்திரம், சுதந்திரமான தேர்தல், மக்கள் பங்கு பற்றல், அரசியல் பங்குபற்றல், மக்கள் இறையான்மை என்பனவாகும்.


இதனுடன் இணைந்த வகையில் ஜனநாயகத்தை அடையாளப்படுத்தும் மேலதிகமான 11 பண்புச் சுட்டிகள் ஜனநாயகம் குறித்த ஆய்வு நூல்களிலிருந்து அடையாளப்படுத்தப்பட்டன. அவை, சமத்துவம், அரசியல் சகிப்புத்தன்மை, பெரும்பான்மைக்கு மதிப்பளித்தல், சிறுபான்மை உரிமையை மதித்தல், சிவில் பங்கு பற்றல், சமூகமாக பிரச்சினை தீர்த்தல், ஜனநாயக சமூகத்தின் பண்புகள், ஜனநாயகத் தலைமைத்துவம், மாற்றுக் கருத்துக்களை சகித்தல், சமூக நீதி, நல்லாட்சி என்பனவாகும்.

இந்த பண்புச் சுட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரம் 06 முதல் 11 வரையான குடியியற் கல்வி பாடப் புத்தகம் உள்ளடக்கப் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்ட போது குறிப்பிட்ட தரத்திலுள்ள பாட உள்ளடக்கத்தின் தலைப்புக்களும் அட்டவணைகளும் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஜனநாயகப் பண்புச் சுட்டியை குறிப்பதாக இருந்தமை மற்றும் ஜனநாயகப் பண்புகளை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தமை அடையாளப்படுத்தப்பட்டது. இதனை அட்டவணை -01,02 என்பன காண்பிக்கின்றன. (இணைப்பு 01)

**1) 2004ஆம் வருடம் ஐ.நா. பொது சபை பிரகடனப்படுத்திய அடிப்படை ஜனநாயகப் பண்புகள்**


அட்டவணை -01 இல் உள்ள தரவுகளை பகுப்பாய்வுக்குட்படுத்திய போது பின்வரும் கண்டடைவுகள் கிடைக்கப் பெற்றன. இதில் 17 பண்புச் சுட்டிகளும் பாட உள்ளடக்கத்தில் அனைத்துத் தரங்களிலும் வித்தியாசமான விகிதங்களில் உள்வாங்கப் பெற்றுள்ளமை கண்டடையப் பெற்றது. 1 - சட்ட ஆட்சி, 11 - அடிப்படை உரிமைகள், 15 - மக்கள் பங்குபற்றல் என்பன அனைத்து தரங்களிலும் உள்வாங்கப்பட்டுள்ளமை அடையாளப்படுத்தப்பட்டது. 6 - பல்கட்சி, 14 - சுதந்திரமான தேர்தல் ஆகிய இரு பண்புகளைத் தவிர மற்றைய அனைத்தும் 50% ஐ தாண்டிய வகையில் உள்வாங்கப்பட்டுள்ளது. இதனை முதல் வரைபடம் காண்பிக்கிறது. 6 தரங்களும் 17 பண்புகளையும் எத்தனை விகிதத்தில் உள்வாங்கியுள்ளன என்பது அடுத்ததாகக் கண்டடையப் பெற்றது. தரம் 09 மற்றும் 10 என்பன அனைத்து பண்புகளையும் உட்பொதிந்துள்ளன. தரம் 06 மற்றும் 07 என்பன 41% மான பண்புகளையும் உட் பொதிந்துள்ளன. தரம் 08 மற்றும் 11 என்பன 59 % பண்புகளையும் உட்பொதிந்துள்ளன. இதனை 2ம் வரைபடம் காண்பிக்கிறது.



வரைபடம் 01　　　　　　　　　　　　　　　　　　வரைபடம் -02

மொத்தமாக நோக்குகையில் தரம் 06 முதல் 11 வரையான வகுப்புக்களின் மொத்த பாட உள்ளடக்கத்தின் 67% பகுதி 17 பண்புகளையும் உள்வாங்கியிருக்கின்றது. இங்கு 67% என்பது குறித்த 17 பண்புகளில் 67% என்பதனைக் குறிக்காது. அப்படியாயின் 33% மான பண்புகள் மொத்தமாக உள்வாங்கப்படவில்லை என்பது அர்த்தமாகிவிடும். இது ஒவ்வொரு தரமும் குறித்த 17 பண்புகளையும் உள்வாங்கியுள்ள தடவைகளைக் காண்பிக்கின்றது. அந்த வகையில் பார்க்கும் போது குறித்த 17 பண்புகளும் இடைநிலைக் கலைத்திட்டத்தின் 67% பகுதியில் ஏதோ ஒருவகையில் மொத்தமாக உள்வாங்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிடலாம். இதனை 3ஆம் வரைபடம் காண்பிக்கின்றது.





வரைபடம் -03

**2) ஜனநாயகத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் பண்புகளாக அடையாளப்படுத்தப்படும் பொதுப் பண்புகள்**

ஜனநாயகத்தை அடையாளப்படுத்தும் பிரதான பண்பு சுட்டிகளுக்கு அப்பால் மேலதிகமாக அடையாளப்படுத்தப்பட்ட 11 பண்புச் சுட்டிகளதும் உள்ளடக்கப்பகுப்பாய்வை அட்டவணை -02 காண்பிக்கிறது. (இணைப்பு-01)

இந்த அட்டவணையிலுள்ள தரவுகளை பகுப்பாய்வுக்குட்படுத்திய போது பின்வரும் கண்டடைவுகள் கிடைக்கப் பெற்றன. 11 பண்புச் சுட்டிகளும் பாட உள்ளடக்கத்தில் அனைத்துத் தரங்களிலும் வித்தியாசமான விகிதங்களில் உள்வாங்கப் பெற்றுள்ளமையை இந்தப் பகுப்பாய்வு உறுதிப்படுத்தியது. 1-சமத்துவம், 5-சிவில் பங்குபற்றல் என்பன அனைத்து தரங்களிலும் உள்வாங்கப்பட்டுள்ளது. 11-நல்லாட்சி என்ற பண்பு ஒரேயொரு தரத்தில் மாத்திரமே உள்வாங்கப்பட்டுள்ளது. இது மொத்த தொகையில் 17% மாகும். 7-ஜனநாயக சமூகத்தின் பண்புகள், 8- ஜனநாயகத் தலைமைத்துவம் என்பன 33% மாகவும் ஏனையவை 50% மேற்பட்டதாகவும் காணப்படுகின்றது. இதனை வரைபடம் 04 காண்பிக்கிறது.





வரைபடம்-04


அடுத்து, 6 தரங்களும் 11 பண்புகளையும் எத்தனை விகிதத்தில் உள்வாங்கியுள்ளன என்ற விடயம் ஆய்வுக்குட்படுத்தப்பட்டது. அதில், தரம் 10 அனைத்து பண்புகளையும் உட்பொதிந்துள்ளது. தரம் 06 மற்றும் 07 என்பன 18%மான பண்புகளை உட் பொதிந்துள்ளன. தரம் 08 மற்றும் 09 என்பன 73% பண்புகளை உட்பொதிந்துள்ளன. தரம் 11 64% பண்புகளை உள்வாங்கியுள்ளது கண்டடையப் பெற்றது. வரைபடம் 05 இதனைக் காண்பிக்கிறது.

மொத்தமாக தரம் 06 முதல் 11 வரையான வகுப்புக்கள் மொத்தத்தில் 58% தில் 11 பண்புகளையும் உள்வாங்கியிருப்பது அடுத்த பகுப்பாய்வில் கண்டடையப்பெற்றது. இங்கு

58% என்பது குறித்த 11 பண்புகளில் 58% என்பதனைக் குறிக்காது. அப்படியாயின் 42% மான பண்புகள் மொத்தமாக உள்வாங்கப்படவில்லை என்பது அர்த்தமாகிவிடும். இது ஒவ்வொரு தரமும் குறித்த 11 பண்புகளையும் உள்வாங்கியுள்ள தடவைகளைக் காண்பிக்கின்றது. அந்த வகையில் பார்க்கும் போது குறித்த 11 பண்புகளும் இடைநிலைக் கலைத்திட்டத்தில் ஏதோ ஒருவகையில் மொத்தமாக உள்வாங்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிடலாம். இதனை வரைபடம் 06 காண்பிக்கிறது.




3




மேலுள்ள கண்டடைவுகளை உறுதிப்படுத்தும் விதமாக தரம் 06 முதல் 11 வரையான குடியியற் பாடக் குறிக்கோள்கள் பட்டியல்படுத்தப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டது. இதில் 12 குறிக்கோள்களுள் 08 குறிக்கோள்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஜனநாயகப் பண்புச் சுட்டிகளில் ஒன்றுக்கும் மேற்பட்டதை உட்பொதிந்துள்ளன. அதாவது 67% மான பாடக் குறிக்கோள்கள் ஜனநாயக எண்ணக்கருவை பிரதிபலிப்பதாக காணப்படுகிறது. அட்டவணை -03 (இணைப்பு 02) இதனை காண்பிக்கிறது.

**4) தேசிய இலக்குகள்**

மேலுள்ள அனைத்தையும் உறுதிப்படுத்தும் வகையில் 08 தேசிய இலக்குகளும் பட்டியல் படுத்தப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டது. இதில் காணப்படுகின்ற 08 இலக்குகளுள் 05 இலக்குகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஜனநாயகப் பண்புச் சுட்டிகளில் பலதை உட்பொதிந்துள்ளன. அதாவது, 63% மான தேசிய இலக்குகள் ஜனநாயக எண்ணக் கருவை பிரதிபலிப்பதாகக் காணப்படுகிறது. அட்டவணை 03 (இணைப்பு 03) இதனைக் காண்பிக்கிறது.

**5) பிரதான தலைப்புக்கள்**

தரம் 06 தொடக்கம் 11 வரையான குடியியற் கல்வி பாடப் புத்தகத்தின் பிரதான தலைப்புக்கள் தொகுக்கப்பட்டு பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டது. இதன் போது மொத்தமாக இடை நிலையிலுள்ள 06 வருடங்களிலும் 28 பிரதான தலைப்புக்களை பாடப்புத்தகங்கள் உள்ளடக்கியுள்ளன. இவற்றுள் 18 தலைப்புக்கள் நேரடியாக ஜனநாயகப் பண்புகளை பிரதிபலிக்கின்றன. 08 தலைப்புக்கள் மறைமுகமாக ஜனநாயகப் பண்புகளை பிரதிபலிக்கின்றன. அதாவது 64% மான பிரதான தலைப்புக்கள் நேரடியாக ஜனநாயகப் பண்பைக் காண்பிக்கின்றன. 29% மான பிரதான தலைப்புக்கள் மறைமுகமாக ஜனநாயகப்பண்பை காண்பிக்கின்றன. மொத்தமாக 93% பிரதான தலைப்புக்கள் ஜனநாயகப்பண்பை காண்பிக்கின்றன. அட்டவணை -05 இதனை காண்பிக்கின்றது.

**முடிவுரை**

இந்த ஆய்விலிருந்து நாம் இடைநிலைக் கலைத்திட்டத்தின் குடியியற் கல்விப் பாடம் ஜனநாயக எண்ணக் கருவை கலைத்திட்ட உள்ளடக்கத்தில் 70% கொண்டுள்ளது எனக் குறிப்பிடலாம். ஜனநாயக எண்ணக் கருவை காண்பிக்கும் பிரதான பண்புச் சுட்டிகளை கலைத்திட்ட உள்ளடக்கதின் 58% பகுதியும் மேலதிக பண்புகளை 67% பகுதியும் உள்ளடக்கியுள்ளன. அதேபோன்று தரம் 06 முதல் 11 வரையான குடியியற் பாடக் குறிக்கோள்களுள் 67% மானவை ஜனநாயக எண்ணக் கருவை பிரதிபலிக்கின்றன. தரம் 09, 10, 11 என்பன ஜனநாயக எண்ணக் கருவை நேரடியாக பிரதிபலிக்கும் உள்ளடக்கங்களைக் கொண்டுள்ளன.

தேசியக் கல்விக் கொள்கையில் 63% மானவை ஜனநாயக எண்ணக்கருவை பிரதிபலிக்கின்றன. இவை அனைத்தையும் உறுதிப்படுத்தும் வகையில் தரம் 06 முதல் 11 வரையான குடியியற் பாடத்தின் பிரதான தலைப்புக்களில் 93% ஜனநாயக எண்ணக்கருவை பிரதிபலிக்கின்றன. இவையனைத்தையும் ஒட்டுமொத்தமாக நோக்குகின்ற போது பொதுவாக இடைநிலை குடியியற் கலைத்திட்டம் ஜனநாயக எண்ணக் கருவை போதியளவு பிரதிபலிக்கின்றது என குறிப்பிடலாம்.

அப்படியாயின் பாடசாலைச் சமூகத்திலும் பொதுச் சமூகத்திலும் ஜனநாயகப் பண்புகள் பிரதிபலிப்பதில் குறைபாடுகள் நிலவுவதற்கு கலைத்திட்ட அமுலாக்கத்துடன் தொடர்பான ஆசிரியர் நியமனம், கலைத்திட்ட உள்ளடக்கப் பயிற்சி, கற்பித்தல் முறை, பாடத் தெரிவு போன்ற ஏனைய காரணிகள் ஏதுவாக அமைந்திருக்கலாம் என குறிப்பிடலாம்.

**பரிந்துரை**

இந்த ஆய்வின் கண்டடைவுகளை அடிப்படையாக வைத்து பார்க்கின்ற போது, கலைத்திட்ட உள்ளடக்கத்தில் போதியளவு ஜனநாயக எண்ணக்கரு உள்வாங்கப்பட்டுள்ளமையால், பொதுச் சமூகத்திலும் பாடசாலைச் சமூகத்திலும் ஜனநாயகப் பண்புகள் பிரதிபலிக்காமைக்கான காரணத்தை கண்டறிய, குடியியற் கலைத்திட்டத்திற்கான போதிய ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்களா? அவர்களுக்கான போதிய பயிற்சிகள் வழங்கப்படுகின்றனவா? மாணவர்கள் இதனை சரியாக உள்வாங்குகின்றனரா? என்பன போன்ற எழுவினாக்களுக்கு விடை தேடும் வகையில் இன்னும் பல ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டிய தேவை காணப்படுகிறது எனக் குறிப்பிடலாம்.

அடுத்து தரம் 06 முதல் 09 வரை மாத்திரமே குடியியற் கல்வி கட்டாய பாடமாகக் காணப்படுகிறது. தரம் 10,11 இல் இது இரண்டாம் மொழி சிங்களம் போன்றவற்றுடன் ஒரு தெரிவுப் பாடமாகவே காணப்படுகிறது. எமது கண்டடைவுகளின் படி தரம் 09, 10, 11 என்பனவே, ஜனநாயக எண்ணக் கருவை நேரடியாக பிரதிபலிக்கும் உள்ளடக்கங்களைக் கொண்டுள்ளன. எனினும் அந்த தரத்தில் இரண்டாம் மொழி சிங்களத்துடன் இது ஒரு தெரிவுப் பாடமாக இருப்பதால் அனேகருக்கு கற்பதற்கான வாய்ப்பு இழக்கப்படுகிறது. எனவே, இது தொடர்பாகவும் ஒரு ஆய்வு மேற்கொள்ளப்படுவதுடன். குடியியற் கல்விப் பாடத்தை பிரதான பாடங்களுள் ஒன்றாக மாற்ற வேண்டிய அவசியம் காணப்படுகிறது என்பதனையும் இந்த ஆய்வினடியாக பரிந்துரைக்கலாம்.

**உசாத்துணை**


1. Bahmueller, C. F., Johnston, M., & Quigley, C. N. (2007). Elements of democracy: The fundamental principles, concepts, social foundations, and processes of democracy. Calabasas, CA: Center for Civic Education.
2. Dewey, J. (1916). Democracy and education. New York: The MacMillan Company.
3. Diamond, L. (2004, January 21). What is Democracy? Retrieved from https://diamond-democracy.stanford.edu/speaking/lectures/what-democracy.
4. Gandal, M., & Finn, C. E. (1992). Teaching democracy. Washington, D.C.: United States Information Agency.
5. Heller, D. A. (2012). Curriculum on the edge of survival: How schools fail to prepare students for membership in a democracy. Lanham: Rowman & Littlefield.
6. Klein, A. (2011). Concepts and Principles of Democratic Governance and Accountability A Guide for Peer Educators. Kampala: Konrad-Adenauer-Stiftung.
7. Levinson, Meira, (2014). Citizenship and Civic Education. In Encyclopedia of Educational Theory and Philosophy, ed. Denis C.Phillips. Thousand Oaks, CA: Sage.
8. McPike, E. (2003). Education for democracy. Washington, D.C.: Albert Shanker Institute.
9. Meyer, M. (2011). International Consensus: Essential Elements of Democracy (Publication). Democracy Reporting International.
10. Rose, M. (2014). Why School? Reclaiming Educationfor all of us. Newyork: The New Press.

11. Treadwell, D. F. (2017). Introducing communication research: Paths of inquiry. Los Angeles: Sage.
12. White, M. D. & Marsh, E. E. (2006). Content Analysis: A Flexible Methodology. Library Trends 55(1), 22-45. Johns Hopkins University Press. Retrieved from Project MUSE database.
13. இன்ப குமார், ஜ ம. (2016, October 1). சமுதாயக் கட்டமைப்பில் கல்வி [Web log post]. Retrieved from https://inbariya.wordpress.com
14. கல்விவெளியீட்டுத்திணைக்களம். (2015-2018). குடியியற் கல்வி தரம் 06-11. இசுருபாய: கல்வியமைச்சு.
15. சமூகவிஞ்ஞானத்துறை. (2018). குடியியற் கல்வி பாடத்திட்டம் தரம் 09. மஹரகம: தேசியக் கல்வி நிறுவகம்.
16. வசந்திதேவி, வே. (2018). கல்வி ஓர் அரசியல். சென்னை: பாரதி புத்தகாலயம்.